**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 737/2022**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : மகேஷ்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : முருகேசன் | **Calling** | : | **Business** |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : | |
| **Taluk** | : | **Age** | : | **37** |
| | | **Dated** | : | **08.04.2025** |

**08.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு. மகேஷ்குமார் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 ம் எதிரி ஆஜர்**
**2 ம் எதிரி இறப்பு**
**3 வது எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் மவுண்ட்ஸ் புரத்தில் குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி சீனிவாசனை தெரியும். எதிரிகள் இறந்துபோன எதிரி ராஜா, நாராயணமூர்த்தி ஆகியோர்களை தெரியும். சாட்சி முருகேசன் எனது அப்பா. 20.03.2015 ம் தேதி நானும், எனது அப்பாவும் சுமார் 4.30 மணியளவில் தோமையார்புரத்தில் உள்ள எங்கள் இடத்தை பார்ப்பதற்காக சென்று இருந்தோம். அப்போது எதிரி சீனிவாசன் மற்றும் சுமார் 40 பேர் எங்கள் இடத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டி கொண்டு இருந்தார்கள். அந்த இடத்தில் காம்பவுண்ட் கட்ட கூடாது என்று தடை

உத்தரவு வாங்கி வைத்திருந்தோம். அதையும் மீறி எதிரிகள் காம்பவுண்ட் கட்டி கொண்டிருந்தார்கள். நாங்கள் எதிரிகளிடம் இடத்தை சர்வேயரை வைத்து அளந்த பின்பு கட்டி கொள்ளலாம் என்று கூறினோம். அதற்கு சீனிவாசன் அங்கிருந்த நாகராஜ் மற்றும் ராஜா ஆகியோர்களிடம் இவர்கள் இப்படி தான் பேசி கொண்டு இருப்பார்கள் இவர்களை அடித்து வெளியே தள்ளுங்கள் என்று கூறினார். அந்த இடத்தில் 30, 40 பேர் இருந்தார்கள். அவர்கள் என்னை அடிக்க வந்தார்கள். அப்போது நாகராஜ் செங்கல்லால் எனது தலையில் அடித்துவிட்டார். அதில் எனக்கு இரத்தகாயம் ஏற்பட்டது. அப்போது எனக்கு பின்னால் எனது அப்பா நின்றுகொண்டிருந்தார். எனது அப்பாவை சீனியும், நாகராஜீம் கீழே தள்ளிவிட்டார்கள். நான் எனது அப்பாவை அடிப்பதை தடுப்பதற்காக குறுக்கே விழுந்தேன். அப்போது ஆஜர் எதிரி சீனி, இன்ஜினேயர் ராஜா, மேஸ்திரி நாகராஜ் ஆகியோர் மம்முட்டி கைபிடி கட்டை, சாரம் கட்டும் குச்சி ஆகியவற்றை வைத்து எங்களை உடலில் அடித்தார்கள். எனது அப்பாவை வலது பக்க காலில் அடித்து அவருக்கு காலில் காயம்பட்டது. அதன் பின்பு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு போலீசார் இது சம்பந்தமாக புகார் எழுதி தர சொன்னார்கள். நான் சொல்ல, சொல்ல போலீசார் புகாரை எழுதினார்கள். நான் அதை படித்து பார்த்து கையொப்பம் போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மருத்துவமனையில் எங்களை சிகிச்சை பெற விடாமல் மிரட்டினார்கள். **(புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சம்பவம் சம்பந்தமாக நான் போலீசாரிடம் எழுத்துபூர்வமான எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்ல, சொல்ல எழுதினார்கள் அதை படித்து பார்த்து நான் கையொப்பம் செய்தேன். புகாரில் ராஜா, சூர்யநாராயணன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு எழுதியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் 50 பேர்கள் இருந்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். 30, 40 நபர்கள் அங்கு இருந்தவர்கள் மீது ராஜா என்பவர் கல்லை கொண்டு எறிந்தார் என்றுதான் புகாரில் குறிப்பிட்டுள்ளேன், எறிந்தார்கள் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகே தான் அனுகிரஹா பள்ளி உள்ளது

என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக 2012 ம் வருடம் நான் OS.No.701/2012 என சிவில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி சிவில் வழக்கில் நான் சரிவர ஆஜராகாமல் இருந்ததாலும், எனது அம்மாவை விசாரணை செய்யாததாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கை நான் 2015 வருடம் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், நான் புகார் கொடுக்கும்போது நீதிமன்றத்தில் Stay உத்தரவு இருந்தது. Stay உத்தரவு எத்தனை நாட்கள் கொடுத்தார்கள் என்றால் 2015 வருடம் வரை Stay இருந்ததது. 2015 வருடம் வரை Stay இருந்ததது என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் எதிரி மம்முட்டி பிடியை வைத்து அடித்தார் என்று சொல்லியுள்ளேன், மம்முட்டியால் அடித்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எந்த எதிரி எந்த இடத்தில் என்னை மம்முட்டி பிடியால் தாக்கியதாக நான் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சீனிவாசன், ராஜா, நாகராஜன் ஆகியோர்கள் என்னை மம்முட்டி பிடி, கட்டை, கல் ஆகியவற்றால் உடல் முழுவதும் அடித்தார்கள். மேற்படி சங்கதியை நான் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி சங்கதிகளை நான் சொல்லவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மற்ற எதிரிகள் என்னை தடுத்து பிடித்ததாக சொல்லியுள்ளேன், அது யார் என்று குறிப்பிட்டு போலீசார் சொல்லவில்லை என்றால், அங்கு 40 பேர் இருந்தார்கள் என்னை யார் இறுக்கி பிடித்தார்கள் என்று எனக்கு பெயர் தெரியாது. தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் எனது அப்பாவுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் ஆம். எதிரிகள் என் மீது ஒரு புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதியபட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். புகார் வாக்குமூலத்தில் அடித்தவுடன் மயக்கமாகிவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் மயக்கமாகிவிட்டதாக சொல்லவில்லை கிறங்கிவிட்டதாக தான் சொன்னேன், இரண்டும் வேறு, வேறு. நான் சொன்னமாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையும், என் தகப்பனாரையும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் 15 நபர்களுக்கு மேல் அழைத்து சென்று பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் அழைத்து சென்ற 15 நபர்களுக்கும், அங்கிருந்த 30 நபர்களுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டிருக்கலாம், எதிரிகள் எங்களுக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW
Digitally signed by SOUMYA MATHEW
Date: 2025.04.08 12:04:16 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 737/2022**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **முருகேசன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **துரைராஜ்** | **Calling** | : | **Business** |
| **Village** | : | **திண்டுக்கல்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **65** |
| | | | **Dated** | : | **08.04.2025** |

**08.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு. முருகேசன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 ம் எதிரி ஆஜர்**
**2 ம் எதிரி இறப்பு**
**3 வது எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் மவுண்ட்ஸ் புரத்தில் குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மகேஷ்குமார் எனது மகன். ஆஜர் எதிரி சீனிவாசனை தெரியும். இறந்துபோன எதிரி ராஜா, 3 ம் எதிரி நாராயணமூர்த்தி ஆகியோர்களை தெரியும். 20.03.2015 ம் தேதி நானும், எனது மகனும் சுமார் 4.00 மணியளவில் தோமையார்புரத்தில் உள்ள எங்கள் இடத்தை பார்ப்பதற்காக சென்று இருந்தோம். அப்போது எதிரி சீனிவாசன் மற்றும் சுமார் 40 பேர் எங்கள் இடத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டி கொண்டு இருந்தார்கள். அந்த இடத்தில் காம்பவுண்ட் கட்ட கூடாது என்று தடை

உத்தரவு வாங்கி வைத்திருந்தோம். அதையும் மீறி எதிரிகள் காம்பவுண்ட் கட்டி கொண்டிருந்தார்கள். அதற்கு சீனிவாசன் அங்கிருந்த நாராயணமூர்த்தி மற்றும் ராஜா ஆகியோர்களிடம் இவர்கள் இப்படி தான் பேசி கொண்டு இருப்பார்கள் இவர்களை அடித்து வெளியே தள்ளுங்கள் என்று கூறினார். அப்போது ராஜாவும், நாராயணமூர்த்தியும் என்னை கீழே தள்ளிவிட்டார்கள். ஆஜர் எதிரி சீனிவாசன் சொன்னதின்பேரில் தான் அவர்கள் என்னை தாக்கினார்கள். ராஜாவும், நாராயணமூர்த்தியும் மம்முட்டி கைபிடி மற்றும் செங்கல்லால் என்னை வலதுபுற கெண்டை காலில் அடித்தார்கள். அதன் பின்பு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன் பின்னர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க எனது மகன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

சம்பவயிடத்திற்கு அருகே தான் அனுகிரஹா பள்ளி உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக 2012 ம் வருடம் எனது மனைவி OS.No.701/2012 என சிவில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி சிவில் வழக்கில் எனது மனைவி சரிவர ஆஜராகாமல் இருந்ததால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல, நிலுவையில் தான் உள்ளது. சிவில் வழக்கு நிலுவையில் இருப்பதை காட்டுவதற்கு ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சிவில் வழக்கு தாக்கல் செய்து 3 வருடங்கள் கழித்து 2015 ம் வருடம் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2015 வருடம் Stay உத்தரவு இருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் பற்றி என் மகன் எழுத்துபூர்வமான புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் 30, 40 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிரிகள் செங்கல்லை எடுத்து எனது மகனை தாக்கியதாக சொல்லியுள்ளேன். எதிரி எந்த இடத்தில் தாக்கியதாக போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எதிரிகள் எனது மகனை மம்முட்டி பிடியால் தாக்கியதாக சொல்லியுள்ளேன், எந்த எதிரி , எந்த இடத்தில் மம்முட்டி பிடியால் தாக்கியதாக போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எனது வலது காலில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன், அது எவ்வாறு, எந்த எதிரியால் எனக்கு ஏற்பட்டதாக நான் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை

என்றால் ராஜா என்பவர் தாக்கியதாக சொல்லியுள்ளேன். எதிரிகள் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னமாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையும், என் மகனையும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் 15 நபர்களுக்கு மேல் அழைத்து சென்று பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் அழைத்து சென்ற 15 நபர்களுக்கும், அங்கிருந்த 30 நபர்களுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டிருக்கலாம், எதிரிகள் எங்களுக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.04.08 12:04:24 +0530

Judicial Magistrate No.I
Dindigul.